ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவழுந்தூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவழுந்தூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாயமேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: |
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆ - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் ⋆ கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆ வேண்டிய
வேதங்களோதி ⋆ விரைந்து கிழியறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு ⋆ பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆ உன்
சேவடி செவ்வி திருக்காப்பு || **1.1.1** ||

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர்வாழ் ⋆ இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்திலுள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம்சொல்லி ⋆

sunder kidambi prapatti dot com

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
    பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
    ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
    திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
    அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
    பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி ⋆
    திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
    குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
    ஆயிரந் தோளும் பொழி குருதி
பாய ⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
    நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
    காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
    என்னை வெள்ளுயிராக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
    கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
    சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித் ⋆
    திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
    உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
அந்நாளே ⋆ அடியோங்கள் அடிக்குடில் ⋆
    வீடுபெற்றுய்ந்ததுகாண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
    திருமதுரையுள் சிலைகுனித்து ⋆ ஐந்தலைய
பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
    உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக் கொன்றுமில்லா ⋆
    அணிகோட்டியர் கோன் ⋆ அபிமான துங்கன்
செல்வனைப்போலத் ⋆
    திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
    நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே !⋆
    உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப்⋆
    பரமேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆
    வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆
    நமோ நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆
    சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

**பெரிய திருமொழி – தந்தை காலில்**

‡ தந்தை காலில் பெரு விலங்கு⋆
    தாள் அவிழ⋆ நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார்⋆
    மருவி நின்ற ஊர் போலும்⋆
முந்தி வானம் மழை பொழியும்⋆
    மூவா உருவில் மறையாளர்⋆
அந்தி மூன்றும் அனல் ஓம்பும்⋆
    அணியார் வீதி அழுந்தூரே ॥ **7.5.1** ॥

பாரித்தெழுந்த⋆ படை மன்னர்
    தம்மை மாள⋆ பாரதத்துத் -
தேரில் பாகனாய் ஊர்ந்த⋆
    தேவதேவன் ஊர் போலும்⋆
நீரில் பணைத்த நெடு வாளைக்கு⋆
    அஞ்சிப் போன குருகினங்கள்⋆



sunder kidambi prapatti dot com sunder kidambi

ஆரல் கவுளோடருகணையும் ⋆
    அணியார் வயல்சூழ் அழுந்தூரே ॥ **7.5.2** ॥

செம் பொன் மதிள் சூழ் தென் இலங்கைக் -
    கிறைவன் ⋆ சிரங்கள் ஐயிரண்டும் ⋆
உம்பர் வாளிக்கிலக்காக ⋆
    உதிர்த்த உரவோன் ஊர் போலும் ⋆
கொம்பில் ஆர்ந்த மாதவிமேல் ⋆
    கோதி மேய்ந்த வண்டினங்கள் ⋆
அம்பராவும் கண் மடவார் ⋆
    ஐம்பால் அணையும் அழுந்தூரே ॥ **7.5.3** ॥

வெள்ளத்துள் ஓர் ஆலிலைமேல்
    மேவி ⋆ அடியேன் மனம் புகுந்து ⋆ என்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் ⋆
    நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
புள்ளுப் பிள்ளைக்கிரை தேடிப் ⋆
    போன காதல் பெடையோடும் ⋆
அள்ளல் செறுவில் கயல் நாடும் ⋆
    அணியார் வயல் சூழ் அழுந்தூரே ॥ **7.5.4** ॥

பகலும் இரவும் தானேயாய்ப் ⋆
    பாரும் விண்ணும் தானேயாய் ⋆
நிகரில் சுடராய் இருளாகி ⋆
    நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
துகிலின் கொடியும் தேர்த் துகளும் ⋆
    துன்னி மாதர் கூந்தல்வாய் ⋆

sunder kidambi prapatti dot com

அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் ⋆
 அணியார் வீதி அழுந்தூரே ॥ **7.5.5** ॥

ஏடிலங்கு தாமரை போல் ⋆
 செவ்வாய் முறுவல் செய்தருளி ⋆
மாடு வந்தென் மனம் புகுந்து ⋆
 நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
நீடு மாடத் தனிச் சூலம்
 போழக் ⋆ கொண்டல் துளி தூவ ⋆
ஆடல் அரவத் தார்ப்போவா ⋆
 அணியார் வீதி அழுந்தூரே ॥ **7.5.6** ॥

மாலைப் புகுந்து மலரணைமேல்
 வைகி ⋆ அடியேன் மனம் புகுந்து ⋆ என்
நீலக் கண்கள் பனி மல்க ⋆
 நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
வேலைக் கடல் போல் நெடு வீதி ⋆
 விண் தோய் சுதை வெண் மணி மாடத்து ⋆
ஆலைப் புகையால் அழற் கதிரை
 மறைக்கும் ⋆ வீதி அழுந்தூரே ॥ **7.5.7** ॥

வஞ்சி மருங்குல் இடை நோவ ⋆
 மணந்து நின்ற கனவகத்து ⋆ என்
நெஞ்சு நிறையக் கை கூப்பி ⋆
 நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
பஞ்சி அன்ன மெல்லடி ⋆
 நற்பாவைமார்கள் ⋆ ஆடகத்தின்

sunder kidambi prapatti dot com sunder kidambi

அஞ்சிலம்பின் ஆர்ப்போவா ⋆
    அணியார் வீதி அழுந்தூரே ॥ **7.5.8** ॥

என் ஐம் புலனும் எழிலும் கொண்டு ⋆
    இங்கே நெருநல் எழுந்தருளி ⋆
பொன்னம் கலைகள் மெலிவெய்தப் ⋆
    போன புனிதர் ஊர் போலும் ⋆
மன்னு முது நீர் அரவிந்த மலர்மேல் ⋆
    வரி வண்டிசை பாட ⋆
அன்னம் பெடையோடுடன் ஆடும் ⋆
    அணியார் வயல் சூழ் அழுந்தூரே ॥ **7.5.9** ॥

‡ நெல்லில் குவளை கண் காட்ட ⋆
    நீரில் குமுதம் வாய் காட்ட ⋆
அல்லிக் கமலம் முகம் காட்டும் ⋆ கழனி
    அழுந்தூர் நின்றானை ⋆
வல்லிப் பொதும்பில் குயில் கூவும் ⋆
    மங்கை வேந்தன் பரகாலன் ⋆
சொல்லில் பொலிந்த தமிழ் மாலை ⋆
    சொல்லப் பாவம் நில்லாவே ॥ **7.5.10** ॥

## பெரிய திருமொழி – சிங்கமதாய்

‡ சிங்கமதாய் அவுணன் ⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த ⋆
    சங்கம் இடத்தானைத் ⋆ தழல் ஆழி வலத்தானை ⋆
செங்கமலத்தயன் அனையார் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
    அங்கமலக் கண்ணனை ⋆ அடியேன் கண்டு
கொண்டேனே ॥ **7.6.1** ॥

கோவானார் மடியக் ⋆ கொலையார் மழுக் கொண்டருளும் ⋆
மூவா வானவனை ⋆ முழு நீர் வண்ணனை ⋆ அடியார் -
க்காவா ! என்றிரங்கித் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
தேவாதிதேவனை ⋆ யான் கண்டு கொண்டு
திளைத்தேனே ॥ **7.6.2** ॥

உடையானை ⋆ ஒலி நீர் உலகங்கள் படைத்தானை ⋆
விடையான் ஓட அன்று ⋆ விறல் ஆழி விசைத்தானை ⋆
அடையார் தென்னிலங்கை அழித்தானை ⋆ அணியழுந்தூர்
உடையானை ⋆ அடியேன் ⋆ அடைந்துய்ந்து போனேனே ॥ **7.6.3** ॥

குன்றால் மாரி தடுத்தவனைக் ⋆ குல வேழம் அன்று
பொன்றாமை ⋆ அதனுக்கருள் செய்த ⋆ போர் ஏற்றை ⋆
அன்றாவின் நறுநெய் அமர்ந்துண்ண ⋆ அணியழுந்தூர்
நின்றானை ⋆ அடியேன் ⋆ கண்டு கொண்டு நிறைந்தேனே ॥ **7.6.4** ॥

கஞ்சனைக் காய்ந்தானைக் ⋆ கண்ண மங்கையுள் நின்றானை ⋆
வஞ்சனப் பேய் முலையூடு ⋆ உயிர் வாய் மடுத்துண்டானை ⋆
செஞ்சொல் நான்மறையோர் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
அஞ்சனக் குன்றம் தன்னை ⋆ அடியேன் கண்டு
கொண்டேனே ॥ **7.6.5** ॥

பெரியானை ⋆ அமரர் தலைவற்கும் பிரமனுக்கும் ⋆
உரி யானை உகந்தான் அவனுக்கும் ⋆ உணர்வதனுக் -
கரியானை ⋆ அழுந்தூர் மறையோர்கள் ⋆ அடிபணியும்
கரியானை ⋆ அடியேன் ⋆ கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.6** ॥

திரு வாழ் மார்வன் தன்னைத் ⋆ திசை மண் நீர் எரி முதலா ⋆
உருவாய் நின்றவனை ⋆ ஒலி சேரும் மாருதத்தை ⋆

அருவாய் நின்றவனைத் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
கருவார் கற்பகத்தைக் ⋆ கண்டு கொண்டு களித்தேனே ‖ **7.6.7** ‖

நிலையாள் ஆக ⋆
என்னை உகந்தானை ⋆
நில மகள் தன் முலையாள் வித்தகனை ⋆
முது நான்மறை வீதிதொறும் ⋆
அலையாரும் கடல் போல் முழங்கும் ⋆
தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
கலையார் சொற்பொருளைக் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ‖ **7.6.8** ‖

‡ பேரானைக் ⋆ குடந்தைப் பெருமானை ⋆ இலங்கொளி சேர்
வாரார் வனமுலையாள் ⋆ மலர் மங்கை நாயகனை ⋆
ஆரா இன்னமுதைத் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
காரார் கருமுகிலைக் ⋆ கண்டு கொண்டு களித்தேனே ‖ **7.6.9** ‖

‡ திறல் முருகன் அனையார் ⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற ⋆
அற முதல்வன் அவனை ⋆ அணியாலியர் கோன் மருவார் ⋆
கறை நெடு வேல் வலவன் ⋆ கலிகன்றி சொல் ஐயிரண்டும் ⋆
முறை வழுவாமை வல்லார் ⋆ முழுதாள்வர் வான் உலகே ‖ **7.6.10** ‖

## பெரிய திருமொழி – திருவுக்கும்

‡ திருவுக்கும் திருவாகிய செல்வா ! ⋆
தெய்வத்துக்கரசே ! செய்ய கண்ணா ! ⋆
உருவச் செஞ்சுடராழி வல்லானே ! ⋆
உலகுண்ட ஒருவா ! திருமார்பா ! ⋆



sundarkidambi prapatti dot com

ஒருவற்காற்றியுய்யும் வகையென்றால் ⋆
    உடன் நின்றைவர் என்னுள் புகுந்து ⋆ ஒழியா
தருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன் ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.1** ‖

பந்தார் மெல் விரல் நல் வளைத் தோளி ⋆
    பாவை பூமகள் தன்னொடும் உடனே
வந்தாய் ⋆ என் மனத்தே மன்னி நின்றாய் ⋆
    மால் வண்ணா ! மழை போல் ஒளி வண்ணா ⋆
சந்தோகா ! பௌழியா ! தைத்திரியா ! ⋆
    சாம வேதியனே ! நெடுமாலே ⋆
அந்தோ ! நின்னடியன்றி மற்றறியேன் ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.2** ‖

நெய்யார் ஆழியும் சங்கமும் ஏந்தும் ⋆
    நீண்ட தோள் உடையாய் ⋆ அடியேனைச்
செய்யாத உலகத்திடைச் செய்தாய் ⋆
    சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து ⋆
பொய்யால் ஐவர் என் மெய் குடியேறிப் ⋆
    போற்றி வாழ்வதற்கஞ்சி நின்னடைந்தேன் ⋆
ஐயா ! நின்னடியன்றி மற்றறியேன் ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.3** ‖

பரனே ! பஞ்சவன் பௌழியன் சோழன் ⋆
    பார் மன்னர் மன்னர் தாம் பணிந்தேத்தும்
வரனே ! ⋆ மாதவனே ! மதுசூதா ! ⋆
    மற்றோர் நல் துணை நின்னலால் இலேன் காண் ⋆

நரனே ! நாரணனே ! திருநறையூர்
நம்பீ !⋆ எம்பெருமான் ! உம்பர் ஆளும்
அரனே⋆ ஆதிவராகம் முன் ஆனாய் !⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.4** ‖

விண்டான் விண் புக வெஞ்சமத்தரியாய்ப்⋆
பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து⋆
பண்டான் உய்ய ஓர் மால்வரை ஏந்தும்⋆
பண்பாளா ! பரனே ! பவித்திரனே⋆
கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை⋆
கருமம் ஆவதும் என் தனக்கறிந்தேன்⋆
அண்டா ! நின்னடியன்றி மற்றறியேன்⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.5** ‖

தோயாவின் தயிர் நெய்யமுதுண்ணச்
சொன்னார்⋆ சொல்லி நகும் பரிசே⋆ பெற்ற
தாயால் ஆப்புண்டிருந்தழுதேங்கும்
தாடாளா !⋆ தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்⋆ கிரேத திரேத துவாபர
கலியுகம்⋆ இவை நான்கும் முன் ஆனாய்⋆
ஆயா ! நின்னடியன்றி மற்றறியேன்⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.6** ‖

கறுத்துக் கஞ்சனை அஞ்ச முனிந்தாய் !⋆
கார் வண்ணா ! கடல் போல் ஒளி வண்ணா⋆
இறுத்திட்டான் விடையேழும் முன் வென்றாய் !⋆
எந்தாய் ! அந்தரம் ஏழு முன் ஆனாய்⋆

பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப் ⋆
    போகமே நுகர்வான் புகுந்து ⋆ ஐவர்
அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன் ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.7** ‖

நெடியானே ! கடியார் கலி நம்பீ ! ⋆
    நின்னையே நினைந்திங்கிருப்பேனைக் ⋆
கடியார் காளையர் ஐவர் புகுந்து ⋆
    காவல் செய்த அக்காவலைப் பிழைத்து ⋆
குடி போந்துன் அடிக்கீழ் வந்து புகுந்தேன் ⋆
    கூறை சோறிவை தந்தெனக்கருளி ⋆
அடியேனைப் பணியாண்டுகொள் எந்தாய் ! ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.8** ‖

கோவாய் ஐவர் என் மெய் குடியேறிக் ⋆
    கூறை சோறிவை தாவென்று குமைத்துப்
போகார் ⋆ நான் அவரைப் பொறுக்ககிலேன்
    புனிதா ! ⋆ புட்கொடியாய் ! நெடுமாலே ⋆
தீ வாய் நாகணையில் துயில்வானே ! ⋆
    திருமாலே ! இனிச் செய்வதொன்றறியேன் ⋆
ஆ ! ஆ ! என்றடியேற்கிறை இரங்காய் ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.9** ‖

‡ அன்ன மன்னு பைம் பூம் பொழில் சூழ்ந்த ⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானை ⋆
கன்னி மன்னு திண்தோள் கலிகன்றி
    ஆலி நாடன் ⋆ மங்கைக் குல வேந்தன் ⋆

சொன்ன இன் தமிழ் நன்மணிக் கோவை ⋆
தூய மாலை இவை பத்தும் வல்லார் ⋆
மன்னி மன்னவராய் உலகாண்டு ⋆
மான வெண் குடைக்கீழ் மகிழ்வாரே ॥ **7.7.10** ॥

## பெரிய திருமொழி – செங்கமலம்

‡ செங்கமலத் திருமகளும் புவியும் ⋆ செம் பொன்
திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த ⋆
வங்கமலி தடங்கடலுள் அனந்தன் என்னும் ⋆
வரியரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின் ⋆
எங்குமலி நிறை புகழ் நால் வேதம் ⋆ ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை ⋆
அங்கமலத்தயன் அனையார் பயிலும் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.1** ॥

‡ முன் இவ்வுலகேழும் இருள் மண்டியுண்ண ⋆
முனிவரொடு தானவர்கள் திசைப்ப ⋆ வந்து
பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம் ⋆
பரி முகமாய் அருளிய எம் பரமன் காண்மின் ⋆
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச் ⋆ சங்கம்
அவை முரலச் செங்கமல மலரையேறி ⋆
அன்னம் மலி பெடையோடும் அமரும் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.2** ॥

குலத்தலைய மத வேழம் பொய்கை புக்குக் ⋆
கோள் முதலை பிடிக்க அதற்கனுங்கி நின்று ⋆
நிலத்திகழும் மலர்ச் சுடரேய் சோதீ ! என்ன ⋆
நெஞ்சிடர் தீர்த்தருளிய என் நிமலன் காண்மின் ⋆

மலைத்திகழ் சந்தகில் கனகமணியும் கொண்டு ⋆
    வந்துந்தி வயல்கள்தொறும் மடைகள் பாய ⋆
அலைத்துவரும் பொன்னி வளம் பெருகும் செல்வத்து ⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.3** ॥

சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம் ⋆
    திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி ⋆
இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி ⋆
    எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன் காண்மின் ⋆
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க ⋆
    பொழில்கள் தொறும் குயில் கூவ மயில்கள் ஆல ⋆
அலம்புதிரைப் புனல் புடை சூழ்ந்தழகார் செல்வத்து ⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.4** ॥

சினமேவும் அடலரியின் உருவமாகித் ⋆
    திறல் மேவும் இரணியனதாகம் கீண்டு ⋆
மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி
    மாள ⋆ உயிர் வவ்விய எம்மாயோன் காண்மின் ⋆
இனமேவு வரி வளைக்கை ஏந்தும் ⋆ கோவை
    ஏய்வாய மரகதம் போல் கிளியினின் சொல் ⋆
அனமேவு நடை மடவார் பயிலும் செல்வத்து ⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.5** ॥

வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி ⋆
    மாண் உருவாய் மூவடி மாவலியை வேண்டி ⋆
தான் அமர ஏழுலகும் அளந்த வென்றித் ⋆
    தனி முதல் சக்கரப் படை என் தலைவன் காண்மின் ⋆

தேன் அமரும் பொழில் தழுவும் எழில் கொள் வீதிச் ⋆
செழு மாட மாளிகைகள் கூடந்தோறும் ⋆
ஆனதொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.6** ॥

பந்தணைந்த மெல் விரலாள் சீதைக்காகிப் ⋆
பகலவன் மீதியங்காத இலங்கை வேந்தன் ⋆
அந்தமில் திண் கரம் சிரங்கள் புரண்டு வீழ ⋆
அடு கணையால் எய்துகந்த அம்மான் காண்மின் ⋆
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் ⋆
திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க ⋆
அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.7** ॥

கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
பறித்து ⋆ மழ விடையடர்த்துக் குரவை கோத்து ⋆
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சி வைத்த ⋆
தயிர் வெண்ணெய் உண்டுகந்த மாயோன் காண்மின் ⋆
செம் பவள மரகதம் நல் முத்தம் காட்டத் ⋆
திகழ் பூகம் கதலி பல வளம் மிக்கெங்கும் ⋆
அம்பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்தழகார் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.8** ॥

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் ⋆
ஒண் கரியும் உருள் சகடும் உடையச் செற்ற ⋆
நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி ⋆
நிலவு புகழ் நேமியங்கை நெடியோன் காண்மின் ⋆

சேடேறு பொழில் தழுவும் எழில் கொள் வீதித் ⋆
திருவிழவில் மணியணிந்த திண்ணை தோறும் ⋆
ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்து ⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ‖ **7.8.9** ‖

‡ பன்றியாய் மீனாகி அரியாய்ப் ⋆ பாரைப்
படைத்துக் காத்துண்டுமிழ்ந்த பரமன் தன்னை ⋆
அன்றமரர்க்கதிபதியும் அயனும் சேயும்
அடி பணிய ⋆ அணியழுந்தூர் நின்ற கோவை ⋆
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன் ⋆
கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல் ⋆
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார் ⋆
ஒலி கடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே ‖ **7.8.10** ‖

### பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

கூந்தலார் மகிழ் ⋆ கோவலனாய் ⋆ வெண்ணெய்
மாந்தழுந்தையில் ⋆ கண்டு மகிழ்ந்து போய் ⋆
பாந்தள் பாழியில் ⋆ பள்ளி விரும்பிய ⋆
வேந்தனைச் சென்று காண்டும் ⋆ வெஃகாவுளே ‖ **10.1.7** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

கல் உயர்ந்த நெடு மதிள் சூழ் கச்சி மேய
களிறென்றும் ⋆ கடல் கிடந்த கனியே ! என்றும் ⋆
அல்லியம் பூ மலர்ப் பொய்கைப் பழன வேலி ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும் ⋆
சொல் உயர்ந்த நெடு வீணை முலை மேல் தாங்கித் ⋆
தூ முறுவல் நகை இறையே தோன்றநக்கு ⋆

மெல் விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே ⋆
மென் கிளி போல் மிக மிழற்றும் என் பேதையே ‖ **15** ‖

தே மருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத் ⋆
தேன் அதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும் ⋆
பூ மருவி இனிதமர்ந்து பொறியில் ஆர்ந்த ⋆
அறு கால சிறு வண்டே ! தொழுதேன் உன்னை ⋆
ஆ மருவி நிரை மேய்த்த அமரர் கோமான் ⋆
அணி அழுந்தூர் நின்றானுக்கின்றே சென்று ⋆
நீ மருவி அஞ்சாதே நின்றோர் மாது ⋆
நின் நயந் தாள் என்றிறையே இயம்பிக் காணே ‖ **26** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை

காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

அள்ளல்வாய்

அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை ⋆
தென் தில்லைச் சித்திரகூடத்தென் செல்வனை ‖ **67** ‖

திரு செங்கமலவல்லி ஸமேத தேவாதிராஜன் திருவடிகளே ஶரணம்